In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 78/2023

Prosecution witness P.W.3

Name: Kumaresan

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02.03.2026.

**(Accused 1 and 2 present.)**

முதல் விசாரணை :–

நான் 15 வருடமாக நான் ஊர்க்காவல்படையில் பணியாற்றி வருகிறேன். கடந்த 26.06.2022 ம் தேதி விருவீடு காவல்நிலையத்திற்குட்பட்ட நடகோட்டை கிராமத்திற்கு பந்தோபஸ்துக்கு வரவேண்டுமென அழைத்ததன் பேரில் திண்டுக்கல்லில் இருந்து சுமார் 20, 25 பேர்கள் ஈச்சர் வாகனத்தில் TN–57–G–0697 ல் சென்றோம். அந்த வாகனத்தை எஸ்எஸ்ஐ பழனிச்சாமி ஓட்டி வந்தார். நாங்கள் நடகோட்டை செல்வதற்கு முன்பாக இருந்த பாயிண்டுகளில் சுமார் 4,5 நபர்கள் வீதம் 4,5 இடங்களில் இறக்கிவிட்டுவிட்டு கடைசியாக நாங்கள் நால்வர் மட்டும் மேற்படி வாகனத்தில் வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப் அருகில் வந்துகொண்டு இருந்தோம். பின்னால் வந்த நபர்கள் கல்லைக்கொண்டு ஈச்சர் வண்டியில் எறிந்ததில் பின்பக்க கண்ணாடி உடைந்து அந்த கல் பின்னால் உட்கார்ந்து இருந்த ராஜலட்சுமியின் முதுகில் பட்டு வலி ஏற்பட்டது. உடனே சிறப்பு சார்பு ஆய்வாளர் ஈச்சர் வண்டியை நிறுத்திவிட்டு எல்லோரும் கீழே இறங்கி பார்த்தோம். எதிரிகள் இருவரும் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களை விசாரித்ததற்கு அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் ஈச்சர் வண்டி இடித்து விட்டதாகச்சொல்லி கெட்டவார்த்தைகளால் திட்டினார்கள். பின்னர் அங்கு வந்த அரசு பேருந்தில் நாங்கள் அனைவரும் ஏறி விருவீடு காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு ராஜலட்சுமி புகார் கொடுத்தார். பின்னர் ராஜலட்சுமியை வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

இருசக்கர வாகனத்தின் எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வண்டியிலிருந்து நாங்கள் இறங்கும்போது அந்த இடத்தில் கூட்டம் அதிகமாக

இருந்தது என்றால் இல்லை. எஸ்எஸ்ஜ பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டியது குற்றம் என்றால் அவர் குடிக்கவேயில்லை. எஸ்எஸ்ஜ பழனிச்சாமி குடித்துவிட்டு இருசக்கரவாகனத்தில் மோதியதால் 2 வது எதிரியும் அவரது சகோதரரும் அங்கிருந்த ஓடையில் விழுந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. கொஞ்சநேரத்தில் 108 ஆம்புலன்ஸ் வந்து அவர்களை ஏற்றிக்கொண்டு மருத்துவமனை சென்றது என்றால் எனக்கு தெரியாது. ஆம்புலன்ஸ் வந்தது எனக்கு தெரியாது. 2ம் எதிரியின் சகோதரர் பிரகாஷ் என்பவர் புகார் கொடுத்ததன் பேரில் எஸ்எஸ்ஜ பழனிச்சாமி மீது கு.எண்.137/2022 u/s 279 IPC ன்கீழ் வழக்கு பதிவு செய்தவிவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு உடனே கிளம்பிவிட்டோம். காவல் நிலையத்திற்கு செல்லும்போது மாலை 3.20 மணி இருக்கும். காவல் நிலையத்திற்கு நாங்கள் 20 பேரும் போனோம். காவல் நிலையத்தில் புகாரை ராஜலட்சுமி எழுதிக்கொடுத்தார். அந்த புகாரில் நாங்கள் அனைவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். எஸ்எஸ்ஜ பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அவரை காப்பாற்றவேண்டி அவரை பணிநீக்கம் செய்யாமல் இருப்பதற்காகவும் நாங்கள் முந்திக்கொண்டுபோய் புகாரை கொடுததோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.02 16:24:01 +0530

Principal District Judge,
Dindigul.